www.Padasalai.Net www.TrbTnpsc.com

VILLUPURAM DIST.

**வகுப்பு : 9**

தேர்வு எண் | | | | | | |

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024-25

நேரம் : 3.00 மணி] **தமிழ்** [மொத்த மதிப்பெண்கள் : 100

பகுதி - I

**I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.** 15X1=15

1. தமிழ்விடுதூது -------- என்னும் இலக்கியத்தைச் சார்ந்தது.
(அ) தொடர்நிலைச் செய்யுள் (ஆ) புதுக்கவிதை (இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

2. காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே! – எந்தக் காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே! ....... இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்
(அ) முரண், எதுகை, இரட்டைத் தொடை (ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை
(இ) எதுகை, மோனை, இயைபு (ஈ) மோனை, முரண், அந்தாதி

3. மிசை – என்பதன் எதிர்ச்சொல் என்ன?
(அ) கீழே (ஆ) மேலே (இ) இசை (ஈ) வகை

4. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
(அ) அகழி (ஆ) ஆறு (இ) இலஞ்சி (ஈ) புலரி

5. <u>மல்லல்</u> மூதூர் வயவேந்தே – கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
(அ) மறுமை (ஆ) பூவரசுமரம் (இ) வளம் (ஈ) பெரிய

6. முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.
(அ) தமிழர்களின் வீரவிளையாட்டு தொன்மையான ஏறுதழுவுதல்
(ஆ) தமிழர்களின் வீரவிளையாட்டு ஏறுதழுவுதல் தொன்மையான
(இ) தொன்மையான வீரவிளையாட்டு தமிழர்களின் ஏறுதழுவுதல்
(ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்

7. ஐம்பெருங்குழு, எண்பேராயம் – சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்.
(அ) திசைச்சொற்கள் (ஆ) வடசொற்கள் (இ) உரிச்சொற்கள் (ஈ) தொகைச்சொற்கள்

8. தமிழ் நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
(அ) தேசியத் திறனறித் தேர்வு (ஆ) ஊரகத் திறனறித் தேர்வு
(இ) தேசியத் திறனறி, கல்வி உதவித் தொகைத் தேர்வு (ஈ) மூன்றும் சரி

9. ஒன்றறிவதுவே உற்றறிவதுவே இரண்டறிவதுவே அதனொடு நாவே இவ்வடிகளில் அதனொடு என்பது எதைக் குறிக்கிறது.
(அ) நுகர்தல் (ஆ) தொடு உணர்வு (இ) கேட்டல் (ஈ) காணல்

10. விடை வரிசையைத் தேர்க.
அ) இது செயற்கைக்கோள் ஏவு ஊர்தியின் செயல்பாட்டை முன்கூட்டியே கணிக்கும்.
ஆ) இது கடல் பயணத்துக்காக உருவாக்கப்பட்ட செயலி.
i) நேவிக், சித்தாரா ii) நேவிக், வானூர்தி iii) வானூர்தி, சித்தாரா iv) சித்தாரா, நேவிக்

11. கீழ்க்காணும் மூன்று தொடர்களுள்
அ) இருந்த இடத்திலிருந்தே பயணச்சீட்டு எடுப்பதை எளிதாக்கிய மிகப்பெரிய இந்திய நிறுவனம் இந்தியத் தொடர்வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழகம் ஆகும்.



Padasalai.Net
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

ஆ) வங்கி அட்டை இல்லை என்றால் அலைபேசி எண், வங்கிக்கணக்கு எண் ஆகியவற்றைக் கொண்டு பணம் செலுத்துதல் இயலாது.

இ) திறன் அட்டைகள் என்பவை குடும்ப அட்டைகளுக்கு மாற்றாக வழங்கப்பட்டவையாகும்.

1. அ, ஆ ஆகியன சரி, இ தவறு 2. அ, இ ஆகியன சரி, ஆ தவறு

3. அ, தவறு ஆ, இ ஆகியன சரி 4. மூன்றும் சரி

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி.

*தித்திக்கும் தெள் அமுதாய்த் தெள்அமுதின் மேலான*
*முத்திக் கனியேஎன் முத்தமிழே – புத்திக்குள்*
*உண்ணப்படும் தேனே உன்னோடு உவந்து உரைக்கும்*
*விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள்*

12. இப்பாடலடி இடம்பெற்றுள்ள நூல் எது?

(அ) தமிழ்விடு தூது (ஆ) புறநானூறு (இ) குறுந்தொகை (ஈ) தமிழோவியம்

13. முத்தியைத் தருவது எது?

(அ) தேன் (ஆ) கனி (இ) அமுதம் (ஈ) தமிழ்

14. தெள்ளமுது – இலக்கணக்குறிப்புத் தருக.

(அ) பண்புத்தொகை (ஆ) எண்ணும்மை

(இ) வினைத்தொகை (ஈ) அன்மொழித்தொகை

15. முத்தமிழ் – பிரித்து எழுதுக.

(அ) மூ + தமிழ் (ஆ) மூன்று + தமிழ் (இ) மூனு + தமிழ் (ஈ) முத்து + தமிழ்

**II. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

**வினா எண் 21–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **4X2=8**

16. விடைக்கேற்ற வினா அமைக்க.

அ) மணிமேகலைக் காப்பியத்தை இயற்றியவர் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார்.

ஆ) திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதியவர் கால்டுவெல்.

17. கண்ணி என்பதன் விளக்கம் யாது?

18. உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

19. பழமணல் மாற்றுமின் புதுமணல் பரப்புமின் – இடஞ்சுட்டி பொருள் விளக்குக.

20. செயற்கைக் கோள் ஏவு ஊர்தியில் பொருந்தும் செயலியைப் பற்றி திரு. சிவன் கூறுவது யாது?

21. 'மிகுதியான்'..........எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**III எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5X2=10**

22. வீணையோடு வந்தாள், கிளியே பேசு தொடர் வகையைச் சுட்டுக.

23. தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க.

அ) இளமையில் கல்வி ----------

ஆ) சித்திரமும் கைப்பழக்கம் --------

24. உணர்ந்த – பகுபத உறுப்பிலக்கணம் தருக

25. நிலவன் சிறந்த பள்ளியில் படித்தார் – இத்தொடரைப் பிறவினைத் தொடராக்குக.

26. கலைச்சொல் அறிவோம்.

அ) Conical Stone ஆ) Excavation



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

27.மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

அ) மேடும் பள்ளமும் ஆ) கண்ணும் கருத்தும்

28.ஒரு சொல்லால் தொடரின் இரு இடங்களை நிரப்புக. (விலங்கு, அகல்)

அ) எண்ணெய் ஊற்றி --------- விளக்கு ஏற்றியவுடன், இடத்தைவிட்டு -------

IV. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2X3=6

29.மூன்று என்னும் எண்ணுப் பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது?

30.சோழர்காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?

31.உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

மேலை நாடுகளில் குறிப்பாக, தேசிய விளையாட்டாகக் காளைச் சண்டையைக் கொண்டிருக்கும், ஸ்பெயின் நாட்டில, காளையைக் கொன்று அடக்குபவனே வீரனாகக் கருதப்படுவான். அவ்விளையாட்டில், ஆயுதங்களைப் பயன்படுத்துவதும் உண்டு. சில நாட்டு விளையாட்டுகளில் காளையை அடக்கும் வீரன் வென்றாலும் தோற்றாலும் ஆட்டத்தின் முடிவில் அந்தக் காளை கொல்லப்படுதலும் உண்டு. மேலை நாடுகளில் ஆண்டு முழுவதும் நடத்தப்படும் காளை விளையாட்டு, மனிதனுள் ஒளிந்திருக்கும் வன்மத்தையும் போர் வெறியையும் வெளிப்படுத்துவது போல் இருக்கிறது.

1. ஸ்பெயின் நாட்டின் தேசிய விளையாட்டு யாது?
2. வன்மத்தையும் போர் வெறியையும் வெளிப்படுத்துவது எது?
3. உரைப்பத்திக்கேற்ற தலைப்புத் தருக.

V. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 2X3=6

34–வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

32.பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?

33.உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.

34.“காடெல்லாம்.........” எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடலை அடிமாறாமல் எழுதுக.

(அல்லது)

‘ஒன்றறிவதுவே.....’ எனத் தொடங்கும் உயிர்வகை மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

VI. எவையேனும் இரண்டனுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்கவும். 2X3=6

35.தன்வினை, பிறவினை எடுத்துக்காட்டுடன் வேறுபடுத்திக் காட்டுக.

36.வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

37.அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை – இக்குறளில் பயின்று வரும் அணியைச் சுட்டி விளக்குக.

VII. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 5X5=25

38.அ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.


39.அ) உங்கள் நண்பர், பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின் ‘கால் முளைத்த கதைகள்’ என்னும் நூல் குறித்த கருத்துக்களைக் கடிதமாக எழுதுக. (அல்லது)

ஆ) சுற்றுச் சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. அ) மொழி பெயர்க்க.

1. Linguistics -
2. Literature -
3. Philologist -
4. Polyglot -
5. Phonologist -

(அல்லது)

ஆ) நிற்க அதற்குத்தக.........

என் பெற்றோர் மகிழுமாறு நான் செய்ய வேண்டியவை.

1. என் வீட்டின் நிலையறிந்து, தேவையறிந்து பொருள்கள் வாங்குவது.
2. அலைபேசிப் பயன்பாட்டினைப் பத்து நிமிடங்களுக்கு மேல் நீட்டிக்காமல் இருப்பது.
3. ------------------------------------------------
4. ------------------------------------------------
5. ------------------------------------------------

42. நயம் பாராட்டுக.

கல்லும் மலையும் குதித்துவந்தேன் – பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி – எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்
ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் – பல
ஏரி குளங்கள் நிரம்பிவந்தேன்;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் – மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.

– கவிமணி

பகுதி – V

VIII. அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3X8=24

43. அ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

(அல்லது)

ஆ) "நீரின்றி அமையாது உலகு" – என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை எடுத்துக்காட்டுடன் விவரி.

44. அ) தண்ணீர் கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

(அல்லது)

ஆ) இந்திய விண்வெளித் துறை பற்றிய செய்திகளை விவரிக்க.

45. பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

அ) முன்னுரை – மழைநீரின் முக்கியத்துவம் – மழைநீர் சேகரிப்புமுறைகள் – மழைநீர் பாதுகாப்பு – முடிவுரை.

(அல்லது)

ஆ) முன்னுரை – சாலைப் பாதுகாப்பு – சாலைப் பாதுகாப்பின் முக்கியத்துவம் – சாலை விதிகள் – சாலை விதிகளைப் பின்பற்றுவதால் ஏற்படும் நன்மைகள் – முடிவுரை.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com